[1973 நவம்பர் 20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை அவையின் அனுமதியுடன் சிறிது நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

Special buses for women in Madurai.

* 245 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether separate buses are provided for women passengers in the Madurai City; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பாண்டியன் சாலைப்போக்குவரத்துக் கழகம், மதுரை மாநகரில், காலையிலும் மாலையிலும் நெரிசல் மிகுந்த நேரங்களில் மகளிருக்காக வென்றே இரண்டு பேருந்துகளை—வழித்தட எண் 1—மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து வருமான வரி அலுவலகம் வரையிலும்—வழித்தட எண் 14—மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து திருநகர் வரையிலும் நடத்தி வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தமாதிரி பெண்களுக் கென்று தனியாக பஸ்கள் விடுவது சௌகரியமாக இருப்பதால், சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் இம்மாதிரி நெரிசல் நேரத்தில் தனி பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் பரிசீலனை செய்யுமா? தனி பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே தனி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. கோவை நகரைப் பொறுத்த வரையில் அந்த வசதிகளைச் செய்துகொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இப்படி மகளிருக்கென்று தனியாக விடப்படுகின்ற பஸ்களில் மகளிர் கண்டக்டர்களே நியமிக்கப்படுவார்களா? எல்லா நகரங்களிலும் மகளிருக் கென்று தனி பஸ்கள் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெரிசல் நேரங்களில் மட்டும் மகளிருக் கென்று தனி பேருந்துகள் விடுப்படுகின்ற காரணத்தால், மகளிர் கண்டக்டர்களை நியமிப்பது என்பது

சரியல்ல. எல்லா நகரங்களிலுமே இம்மாதிரி தனிப் பேருந்துகள் விடுவது என்பது ஆங்காங்கே இருக்கின்ற நெருக்கடி நிலைமையைப் பொறுத்தது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், மதுரை நகரில் நெரிசல் நேரங்களில் பெண்களுக் கென்று தனி பேருந்துகள் விடப்படுகின்றன என்று சொன்னார்கள். அதே நேரத்தில் சில கல்லூரிகளுக்குப் போகக்கூடிய மாணவர்களுக்கு பஸ் வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் கொஞ்சம் அதிகமாக பஸ்களை விடுவதற்கு பி.ஆர்.சி.-க்கு அரசாங்கம் ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நெரிசலைப் பொறுத்து பஸ் வசதிகள் அதிகமாக்கப்படும்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரை நகரில் இருந்து திருப்பரங்குன்றத்திற்கு—முருகன் கோவிலுக்குச் செல்லும் பாதையில் நெரிசல் அதிகமாக இருக்கிறது. பயணிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தக் கோவிலுக்குச் சென்றுவர பெண்களுக்குத் தனி பஸ் வசதி செய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நெரிசலைப் பொறுத்து போதுமான பஸ் வசதிகள் செய்யப்படும் என்று ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

சேலம் மாரியம்மன் கோயில் கோபுரம்.

*246 **வினு—திருமதி த. ந. அனந்தநாயகி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாரியம்மன் கோயிலில் கோபுரம் கட்டுவதற்கென அண்மையில் அனுமதி ஏதேனும் கோரப்பட்டதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.